மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு ஆன்சர் பண்ணுவார்கள். வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

சேலத்திலும் திருச்சியிலும் மருத்துவக் கல்லூரிகள் அமைப்பது குறித்து அமைச்சர்கள் தெரிவித்த மாறுபட்ட கருத்துக்கள் பற்றி

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, ஆர்டர் ஆப் தி ஹவுஸை மாற்ற வேண்டும் என்கிறேன்.

சபாநாயகர் அவர்களே, பத்திரிகைச் செய்தியில், மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கோவையில் பேசிக் கொண்டிருந்த விழாவிலே "நான்காவது திட்டத்திலே சேலத்திலும், திருச்சியிலும் மருத்துவக் கல்லூரிகள் ஏற்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு கல்வி அமைச்சரவர்கள் அப்படிக் கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். பிரஸ் கான்பரன்சில், நிதி அமைச்சரவர்களும், கல்வி அமைச்சரும் சேர்ந்து சொன்னார்களா ? இப்படிப்பட்ட பெரிய கொள்கையிலே, திட்டத்திலே, நிதி அமைச்சர் நிதியைக் கொடுக்கிறவர்; கல்வி அமைச்சர் அதை ஏற்றுக் கொள்கிறவர். இவற்றில் எது உண்மை ? மந்திரிகளுக்குள்ளே அபிப்பிராய பேதம் இருக்கிறது என்பதற்கு இது அடிப்படையா? பொது மக்களாகிய நாங்கள் இதனால் கஷ்டப்படுகிறோம். எது உண்மை? எது தவறு? சர்க்காருடைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இரண்டுமே உண்மை என்பதுதான் அரசின் நிலை. (சிரிப்பு) (குறுக்கீடு) ஆமாம், இடையிலே ரொம்பப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பொழுது போக்காக மந்திரிகளிடம் தகராறு; கட்சிக்குள்ளே தகராறு என்பார்கள். எந்தவிதமான நிலையும் அப்படியில்லை. இரண்டும் உண்மைதான். ஆனால், பத்திரிகைகளில் தங்களுக்குத் தகுந்தவாறு போட்டிருக்கிறார்கள். அவர்கள் போட்ட முறையிலே, பாவனையிலே வித்தியாசம். கோவையில் நான் மருத்துவக் கல்லூரிக் கட்டடத்தை திறந்து வைக்கும்போது, சேலத்திலும், திருச்சியிலும், இரண்டு மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கான "பிரபோஸல்ஸ்" திட்டங்கள் நான்காவது திட்டகாலத்தில் உருவாக்கப்படும். இரண்டு கல்லூரிகள் திறக்கப்படும் என்று சொன்னேன். அரசாங்கத்தின் உண்மை நிலையும் அதுதான். நான்காவது திட்டத்தின் இரண்டாவது வருடத்தில் இருக்கிறோம். அந்தக் காலத்திற்குள் திறக்கும் திட்டங்கள், செயற்குறிப்புகள் இருக்கின்றன. பேசுகிற போது, காரணம் சொன்னேன், கோவைக்கு கல்லூரி வருவதற்கே இவ்வளவு காலம் ஆயிற்று. வருடத்திற்கு ரூ. 50 லட்சம் ஆகிறது. டெல்லியிலிருந்து பணம் கொடுப்பதில்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்றால், 1974-ம் ஆண்டுக்குள்ளாக இன்னும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள், சேலத்தில் ஒன்று திருச்சியில் ஒன்று ஆக இரண்டு கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்புகள் இருக்கின்றன என்று நான் சொன்னேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது என்னவென்று எனக்குத் தெரியாது. பத்திரிகைகளில்தான் பார்த்தேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பொழுதுதான் இரண்டாவது வருடம் நடக்கிறது. சேலத்திலும், திருச்சியிலும் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கான திட்டம் விடப்பட்டது என்று அர்த்தம் அல்ல. நான்காவது திட்டம் முடிவதற்குள்ளாக ஆரம்பிக்க வழிவகைகள் இருக்கின்றன. செயற்குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் பத்திரிகைக்காரர்கள் எல்லாம் செய்தியை தங்களுக்கு விருப்பமான வகையில், "மதியழகனுக்கு நெடுஞ்செழியன் மறுப்பு" என்றும், "நெடுஞ்செழியனுக்கு மதியழகன் மறுப்பு" என்ற வகையிலும் போட்டுக்கொள்கிறார்கள். இந்த மாதிரி செய்திகளைப் போட்டு, சேலத்து மக்களையும், திருச்சி மக்களையும் என்மீது கோபத்தை உண்டுபண்ணும்படி செய்துவிட முடியாது. நிதி நிலைகள், ஆதாரங்கள் இவற்றை கொண்டு இந்த நான்காவது திட்டத்திலே திருச்சியிலும், சேலத்திலும் மருத்துவக் கல்லூரி அமைய வழிவகைகள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது.

(3) நடைமுறைக் கேள்விகள்.

(அ) உறுப்பினர்கள் அதிகாரிகள் காலரியில் உள்ள அதிகாரிகளிடமிருந்து செய்திகளைப் பெறுதல் குறித்து.

(திரு. சி. வி. எம் அண்ணாமலை அவர்கள் அதிகாரிகள் காலரியில் பேசிக்கொண்டு இருந்தார்.)

THIRU K. VINAYAKAM : On a point of Order, Sir. There was a ruling yesterday in the Lok Sabha also that Members from either the Treasury Benches or from Opposition Benches should not get themselves tutored by the officials in the officials gallery The Hon. Speaker of the Lok Sabha has ruled that such a thing is inconsistent with the rules obtaining in that House.

Even yesterday, here some Members were getting themselves tutored by the officials near he officials gallery and getting information. Of course they can do so stealthily. I raised the point yesterday.

THE HON. THIRU K. A. MATHIALALAGAN : you can agree with Thiru Vinayakam, Sir.

THIRU K. VINAYAKAM : The Hon. Minister comes to the aid of the Hon. Speaker. It is not necessary. The Hon. Speaker is well-versed in rules.